Registered as a News Paper    பக்கங்கள்: 04    விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 25    (10 - 08 - 1991)    சனிக்கிழமை    ஓசை: 173

## போரினால்பாதிக்கப்பட்ட இலங்கையருக்கு நட்டஈடு

(கொழும்பு)

வளைகுடாப் போரினால் பாதிக்கப்பட்ட இலங்கைப் பிரஜைகளுக்கு நட்டஈடு கிடைக்கவுள்ளது. ஆகக்குறைவான தொகையான ஒரு லட்சம் ரூபாவில் இருந்து இரண்டரை லட்சம் ரூபா வரையில் நட்ட ஈடாக வழங்குவதற்கு தேவையான நிதியை ஐக்கிய நாடுகள் சபை உதவ முன்வந்துள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

# மலையக மக்கள் முன்னணி மீது ஐ. தே. க. அரசாங்கம் பழிவாங்கல்

வடக்கிலிருந்து வெளியில் செல்ல

## அனுமதி வழங்கும் அலுவல் இன்று முதல் ஆரம்பம்

(நமது நிருபர்)

வடபகுதியில் இருந்து வெளியே செல்வோருக்கான அனுமதி வழங்கும் சகல அலுவலகங்களும் இன்று முதல் மீண்டும் செயற்பட ஆரம்பிக்கும் என்று போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

இது சம்பந்தமாக மேலும் 20-06-91 ஆம் திகதிக்கு முன்பாக வழங்கப்பட்ட வடபகுதிக்கு வெளியே செல்வதற்கான தற்காலிக அனுமதிப் பத்திரங்கள் மீளப் புதுப்பிக்கப்பட வேண்டும் எனவும், 20-06-91 ஆம் திகதி முதல் 14 07-91 வரை வடபகுதிக்கு வெளியே செல்வதற்கென வழங்கப்பட்ட தற்காலிக அனுமதிப் பத்திரங்கள் 15-08-91க்கு முன்பாக வடபகுதிக்கு வெளியே செல்வதற்காகப் புதுப்பிக்கப்படத் தேவையில்லை எனவும், அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 20-06-91லிருந்து 10-07-91 வரை வடபகுதிக்குள் வந்தவர்கள் மீளவும் 20-08-91க்கு முன்பாக வடபகுதிக்கு வெளியே செல்வதா

(4ஆம் பக்கம் பார்க்க)

## இ. தொ. கா.வும் அரசிற்கு ஆதரவு?

(கொழும்பு)

மலையக மக்கள் முன்னணியைச் சேர்ந்த மேலும் மூன்று முக்கியஸ்தர்களை சிறிலங்கா பொலிஸார் தலவாக்கொல்லையில் கைது செய்துள்ளனர். கொழும்பு கூட்டுப்படைத் தலைமையகக் குண்டு வெடிப்புத் தொடர்பாகவே இவர்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படினும், இது ஒரு அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை என்றே அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

கொட்டகலையில் சயனைட் உட்கொண்டு மரணமடைந்த வரதனுக்கு அடைக்கலம் கொடுத்தனர் என்ற சந்தேகத்தில் மேற்படி அமைப்பைச் சேர்ந்த அதன் தலைவர் சந்திரசேகரன் உட்பட கட்சி முக்கியஸ்தர்கள் பலர்கைதாகியது தெரிந்ததே.

இவர்களைத் தொடர்ந்து தற்போது இந்த அமைப்பைச் சேர்ந்த நிர்வாகச் செயலாளர் ஆர். என். செல்லையா, பிரதித் தலைவர் சரத் அத்துக்கோறள, நகரசபை உறுப்பினர் சுப்பிரமணியம் ஆகியோரே கைது செய்யப்பட்டனர்.

அதேவேளை மலையக மக்கள் முன்னணி தலைவர்களும்,

(4ஆம் பக்கம் பார்க்க)

## 6 இராணுவம் பலி; 52 பேர் காயம் ஆனையிறவில் தொடர்ந்தும் மோதல்

-- சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

ஆனையிறவுப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்திற்கும் இடையில் கடும் மோதல்கள் இடம் பெற்று வருவதாக கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆனையிறவு முகாமின் தென்பகுதியில் இருந்து முன்னேறி இராணுவத்தினர் தமது நிலையைப் பலப்படுத்த முனைந்தபோதே இம்மோதல்கள் ஏற்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேற்று முன்தினத்தில் இருந்து நேற்றுவரை இம்மோதல் இடம்பெறுவதாகவும் விமானப்படையின் உதவியுடன் புலிகளின் நிலைகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

மண்டைதீவு வழிப்பிள்ளையார்

## ஆலயத்தின் பின்புறத்தில் இளைஞனின் சடலம்

(குருநகர்)

மண்டைதீவு ஒலிபரப்பு நிலையத்திற்கு அண்மையாக வழிப்பிள்ளையார் ஆலயத்திற்குப் பின்புறம் இளைஞர் ஒருவர் மர்மமான முறையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

நேற்று (9-8-91) அதிகாலை அவ்வழியாக வந்தவர்கள் சடலத்தைக் கண்டதாகத் தெரிவித்தனர்.

பிள்ளையார் ஆலயப் பின் சுவரில் புதிய லுமாலா சைக்கிள் ஒன்று பூட்டி சாவி எடு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பொன்னாலையில் வீடுகள் எறிகணையால் சேதம்

(சுளிபுரம்)

காரைநகர் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவம் நேற்று முன் தினம் இரவு 8 மணி முதல் தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டது. சுமார் 15 நிமிடங்கள் வரை மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலினால் பொன்னாலை கிருஷ்ணர் கோயிலை அண்மிய சில வீடுகள் சேதமடைந்தன. இந்தஎறிகணைத் தாக்குதல் இப்பகுதியில் நாளாந்தம் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ச)

## 7 முஸ்லிம்கள் கொலை

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறையில் ஏழு முஸ்லிம்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாக சிறிலங்கா வானொலி அறிவித்தது.

## இலவச வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தாய் மன்றத்தினரால் நடாத்தப்பட்ட சகல இலவச வகுப்புகளும் மீண்டும் இன்று முதல் ஆரம்பமாகின்றன. சகல மாணவர்களையும் சமுகமளிக்குமாறு மேற்படி மன்றத்தினர் கேட்டுள்ளனர். (ச)

சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான

## பாராளுமன்ற தெரிவுக்குழு பிரேரணைநிறைவேற்றம்

(கொழும்பு)

சமாதானத்தையும், உறுதியான அரசியல் சூழ்நிலையையும் ஏற்படுத்துவதற்கு பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமிக்க வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் சட்சி உறுப்பினர் சமர்ப்பித்த பிரேரணை பாராளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது

சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் மங்கள முனசிங்க இப்பிரேரணையை சமர்ப்பித்தார். ஆளும் கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் இப்பிரேரணையை ஆதரித்தமையால்

(4ஆம் பக்கம் பார்க்க)

## 13 ஆம் திகதி நோயாளர் கொழும்பு செல்வர்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் சிகிச்சை பெறுவதற்காக நோயாளர் கப்பல் மூலம் கொண்டுசெல்லப்படவுள்ளனர். எதிர்வரும் 13ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) காலை 6 மணிக்கு இவர்கள் அழைத்துச் செல்லப்படவுள்ளனர். இதற்காக ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களையும் அவர்களுடன் செல்லும் உதவியாளர்களையும் பயணத்தின்போது இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு மற்றும் தண்ணீர் என்பவற்றுடன் அன்றைய தினம் காலை 6மணிக்கு போதனா வைத்தியசாலைக்குச் சமுகமளிக்குமாறு போதனா வைத்தியசாலை வைத்தியப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ச)

## பரீட்சைகளை உடன் நடத்த கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நடாத்தப்படாத கடந்த இரண்டு வருட பரீட்சைகளை உடனடியாக நடத்தும்படி கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

இந்த அமைப்பின் தலைவர் கே. உதயக்குமார் பரீட்சைகளை உடனடியாக நடத்தக் கோரி உயர் கல்வி அமைச்சுக்கும் கல்வி அமைச்சுக்கும் தொழிற்கல்விப் பணிப்பாளருக்கும் தமது கல்லூரி அதிபருக்கும் மனு ஒன்றை சமர்ப்பித்துள்ளார். (லோ)

ஆசிரியர் சிலருக்கு

## ஊக்குவிபபு கொடுப்பனவு இதுவரை கிடைக்கவில்லை

(நல்லூர்)

1989 ஜூலை முதல் 1989 டிசம்பர் மாதம் வரை வழங்கப்பட வேண்டிய ஊக்குவிப்புக் கொடுப்பனவு இதுவரை சில ஆசிரியர்களுக்கு யாழ். கல்வித் திணைக்களத்தினாலும், கோட்டக்கல்வி அலுவலகங்களினாலும் வழங்கப்படவில்லை.

சேவை நீடிப்புக் கிடைக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கிணறுகளை மீண்டும் தோண்டுவதற்கு முயற்சி

(மண்டைதீவு)

மண்டைதீவுப் பகுதியில் கடந்த வருடம் சிறிலங்கா இராணுவத்தினர் தரித்திருந்தபோது அவர்களினால் மூடப்பட்ட எல்லாக் கிணறுகளையும் மீண்டும் தோண்டுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிகின்றது.

நேற்றும், நேற்று முன்தினமும் பதினாறு பேர்களுடைய எலும்புக்கூடுகள் மண்டைதீவு பகுதிக் கிணறுகளில் இருந்து தோண்டி எடுக்கப்பட்டது தெரிந்ததே. (88)

## தனியார்கல்விநிறுவனங்கள் இன்று முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத் தனியார் கல்வி நிறுவனங்கள் அனைத்தும் இன்று (சனிக்கிழமை) முதல் வழமைபோல் செயல்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

போர்க்கால சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு கடந்த இருபது நாட்களாக மூடப்பட்டிருந்த மேற்படி கல்விநிலையங்களே மீண்டும் இன்றுமுதல் இயங்கவுள்ளன. இக்கல்வி நிறுவனங்கள் ஒன்றிய யாப்பு விதிகளுக்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**தேவை**

நாட்டுத் தேக்கு விதை தேவை. மில்க்வைற் யாழ்ப்பாணம். (B/2922)

**மலிவு விற்பனை**

A/L, O/L, ஆண்டு 5 புலமைப்பரிசில்) பரீட்சைகளுக்கான Tutes மலிவு விலையில் விற்பனையாகின்றன. Bon/டத்தக நிலையம் 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (B/2891)

---

**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இலங்கை**

**மருத்துவபீடம் (இறுதி ஆண்டு பரீட்சை-1991)**

16.08.91இல் நடைபெறவிருந்த மருத்துவபீட இறுதியாண்டுப் பரீட்சை பின்போடப்பட்டுள்ளது. புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

பதிவாளர்

(B-2926)

---

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை**

**சீர்உடைத் துணிகளின் விற்பனைக்கான கேள்விப் பத்திரம்**

பின்வரும் துணிகளை கொள்வனவு செய்ய விரும்புவோர் பொறியிடப்பட்ட கூறுவிலைகளை 1991-08 17 ஆம் திகதி மாலை 2 மணிக்கு அல்லது முன்னதாக நிதியாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''சீர் உடைக்கான கூறுவிலைகள்'' என்று இடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரப்படிவம் எதுவும் வழங்கப்படமாட்டாது.

1. 870 மீற்றர் வெள்ளை பொலியஸ்டர் 'சீனரக' சேட் துணி.
2. 450 மீற்றர் வெள்ளை பொலியஸ்டர் காற் சட்டைத்துணி.
3. 350 மீற்றர் காக்கி பொலியஸ்டர் காற் சட்டைத்துணி.

மேற்படி கூறுவிலைகள் 1991 . 08 . 17ஆம் திகதி மாலை 2-30 மணிக்கு திறக்கப்படும். ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 100 க்கான காசுக் கட்டளை/தபாற்கட்டளை அல்லது யாழ். பல்கலைக்கழக காசாளரிடம் நேரடியாகச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டை கூறுவிலைகளுடன் இணைக்கப்பட்டிருந்தால் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். குறிப்பிட்ட துணிகளை 15ஆம், 16ஆம் திகதிகளில் அலுவலக நேரத்தில் நிதிக்கிளையில் பார்வையிடலாம்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(B-2928)

---

# காலாட்படையால் முப்படையை 24 நாட்கள் தடுத்து நிறுத்தினோம்

(யாழ்ப்பாணம்) -- சலீம்

காலாட்படையை மட்டும் கொண்டுள்ள விடுதலைப்புலிகளாகிய நாம் பல்லாயிரக் கணக்கான இராணுவத்தினரையும் முப்படைகளையும் கொண்டுள்ள ஒரு மாபெரும் சக்தியை எதிர்த்துப் போராடி வருகிறோம்.

உலக நாடுகளின் இராணுவ ஆலோசனைகளையும் கடல், தரை, வான்படைகளையும் முழுமையாகப் பயன்படுத்தியும் சிறிலங்கா இராணுவம் ஆனையிறவு முகாமை வந்தடைய இருபத்தி நான்கு நாட்கள் எடுத்துள்ளது.

இவ்வளவு நாட்களும் இவர்களது முன்னேற்றத்தை எமது காலாட்படை மட்டும்தனித்து நின்று தடுத்துப் பாரிய இழப்புகளை அவர்களுக்கு ஏற்படுத்தியது ஓர் புதிய வரலாறே. இதனை இன்று உலகமே வியந்து நிற்கிறது. இவ்வாறு நேற்றுக்காலை யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற யாழ்.மாவட்ட தனியார்கல்வி நிறுவன ஒன்றியப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப்புலிகள் முக்கிய பிரமுகர் சலீம் தெரிவித்தார். மேற்படி கூட்டத்தில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியைச்சேர்ந்த மருசாலப்பா, அருள்மாஸ்ரர் ஆகியோரும் உரையாற்றினர்.

## மகோற்சவம்

இம்மாதம் 15 ஆம் திகதி (15-08-91) வியாழக்கிழமை நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது. (24)

---

**யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்**

## வீதித் தடை பற்றிய அறிவித்தல்

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தினை முன்னிட்டு 15-08-1991ஆம் திகதி அதிகாலை 12-01 மணியிலிருந்து 09-09-1991ஆம் திகதி நள்ளிரவு 12-00 மணிவரைக்கும் கீழ்வரும் பாதைகள், தெருக்கள் போக்குவரத்திற்கு மூடப்பட்டிருக்கும் என்பதை அறியத் தருகின்றோம்.

01. அரசடிச் சந்திக்கும் 2ஆம் கட்டை தூணுக்கும் இடைப்படும் பருத்தித்துறை வீதியின் அப்பாகம்.

02. பிராமணக் கட்டுக்குளச் சந்தியிலிருந்து சங்கிலியன்வீதிச் சந்திக்கு இடைப்படும் கோவில் வீதியின் அப்பாகம்.

03. செட்டித்தெரு ஒழுங்கையிலிருந்து செட்டித் தெருவின் அப்பாகம்

04. பஸ்வண்டிகள், மினிபஸ்கள் மற்றும் சுமை கூடிய வாகனங்கள் ஆனைப்பந்திச் சந்தியிலிருந்து நாவலர் வீதிவழியாக கச்சேரி நல்லூர் வீதிச் சந்தி வழியாக முத்திரைச் சந்தைச் சந்தியூடாகச்செல்லல்.

05 2ஆம் கட்டைக் குறுக்கு வீதியிலுள்ளவர்கள் மட்டுமே தமது வாகனங்களை அவ்வீதியில் பாவிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

எனவே, சகல வாகன உரிமையாளர்களும் இவ்விடயத்தில் பூரண ஒத்துழைப்பு நல்குமாறு வேண்டுகிறோம்.

மாநகர அலுவலகம்
யாழ்ப்பாணம்
09-08:1991


மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

(B-2927)

---

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
09
03
1958



இறப்பு
26
06
1991

**சண்முகம் முருகமூர்த்தி**

மயூரன் பிளாஸ்ரிக் உரிமையாளர்
(குளத்தூர் இந்தியா)

அல்பேட் வீதி,
கலட்டி,
அச்சுவேலி,

மனைவி, மக்கள்,
தாயார், சகோதரர்,
உறவினர்.

(B/ 1626)

---

## 91-ம் நாள் நினைவஞ்சலி

விரஜனனம்
15
07
1976



வீரமரணம்
12
05
1991

**வீரவேங்கை புஸ்பகாந்**
**(ஐயாத்துரை சிவதரிசன்)**

குஞ்சிக்குளம் மல்லாவி, துணுக்காய்

ஓ வீரனே...
நீ கொண்ட இலட்சியம்
இங்கு நிறைவேறும் போது
மலரும் தமிழ் ஈழ மண்ணில்
நீயுறங்கும் மாவீரர் மயானத்தில்
நாளைய சந்ததி கூடி நிற்கும்
சுதந்திர கீதம் இசைத்து - உன்
புகழ் பாடி மௌன அஞ்சலி செலுத்தும்.

(R/1612)

---

## நினைவு கூருகின்றோம்...

**1991 - 08 - 10**

1985 ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரமரணமெய்திய
❋ ராஜா (மாணிக்கம் நடராஜா - திருக்கோணமலை)

யாழ்ப்பாணம் / தாவடிச் சந்தியில் தேசவிரோதிகளின் தாக்குதலினால் வீரமரணமெய்திய
பிடல் (சர்வானந்தன் சசிகுமார் - சசிகுமார் வீதி, கோண்டாவில் மேற்கு)

1986 ஆம் ஆண்டு வீரமரணமெய்திய
அர்ச்சுனன் (இராசநாயகம் அரியநாயகம் - ஜெயக்குமார்)

1987 ஆம் ஆண்டு தேசவிரோதிகளால் அடித்துக் கொலை செய்யப்பட்ட
செல்வம் (காளிதாசன் செல்வகுமார் - திருக்கோணமலை)

1989 ஆம் ஆண்டு கோண்டாவிலில் தேசவிரோதிகளால் பிடித்துச் செல்லப்பட்டு பின்னர் சடலமாக மீட்கப்பட்ட தமிழ் இளைஞன்

1990 ஆம் ஆண்டு சுகவீனம் காரணமாக எமைப்பிரிந்த
ஸ்வரகுமார் (யோகநாதன் – பழுகாமம்)

ஆனையிறவில் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய
சுரேஷ் (சோமசுந்தரம் பரமேஸ்வரன் - முட்டுச்சேனை, வெருகல்)

திருக்கோணமலை / பச்சனூரில் சிறிலங்காப் படையினரால் சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் உட்பட 11 தமிழர்கள்

வவுனியாவில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 16 தமிழ் இளைஞர்கள்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

❋ மேற்குறிப்பிட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/ 2917)

### சிந்தனைக்கு

உண்மைகளைப் புறக்கணிப்பதால், அவை உண்மைகளாய் இல்லாமல் போவதில்லை.

— ஆஸ்டஸ் ஹக்ஸ்லி

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம், 10-08-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 023-2839 நிர்வாகபீடம் 5208
த. பெ. எண் 05

# கலிபோனியா வரை பௌத்த பேரினவாதம்

கலிபோனியாவில் 'சக்ரமண்டோ' பல்கலைக்கழகத்தில் திட்டமிட்டவாறு தமிழீழ ஆய்வு மாநாடு கடந்த 19 ஆம் திகதியில் இருந்து 21 ஆம் திகதி வரை நடைபெற்றது. கலிபோனிய பல்கலைக்கழகமும் சர்வதேச தமிழர் ஒன்றியமும் இணைந்து நடத்திய இம்மாநாட்டில் பல மேற்கு நாட்டு அறிஞர்களும் கலந்து கொண்டார்கள். இம்மாநாட்டில் தமிழீழம் பற்றிய பல ஆய்வுக் கட்டுரைகளும் வாசிக்கப்பட்டன.

இக்கலிபோனியா மாநாட்டை ஆரம்பம் முதலே குழப்புவதற்கு சிறிலங்கா அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வந்தது. சிறிலங்கா அரசாங்கம் முதலில் அமெரிக்க அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு மாநாட்டுக்குத் தடை விதிக்குமாறு கோரியது. ஆனால் அமெரிக்க அரசாங்கம் கருத்துச் சுதந்திரம் என்ற ரீதியில் மறுத்து விட்டது. பின்னர் அமெரிக்காவில் உள்ள சிங்களவரைக் கொண்டு கலிபோனிய பல்கலைக்கழகத்திற்கும், அமைப்பாளர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் மிரட்டல்களை விடுத்துப் பார்த்தார்கள். ஆனால் எவரும் மிரட்டல்களுக்குப் பணிந்து போகவில்லை. இறுதியில் மாநாட்டு மண்டபத்திற்கெதிராக போராட்டம் நடத்தி மாநாட்டைக் குழப்பலாம் எனத் திட்டமிட்டார்கள். ஆனால் அமமுயற்சியும் வெற்றிபெறவில்லை.

தமிழைப் பற்றி ஆய்விற்கோ அன்றித் தமிழரைப் பற்றிய ஆய்விற்கோ எதிராகச் சிறிலங்கா பேரினவாத சக்திகள் நடவடிக்கை மேற்கொண்டமை இது முதல் தடவையல்ல. 1974 ஆம் ஆண்டு இலங்கையில் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெறாமல் தடுப்பதற்கும் சிறிலங்கா பேரினவாத சக்திகள் பெரும் பிரயத்தனம் செய்தன. ஆனால், அவற்றையும்மீறி யாழ்ப்பாணத்தில் நான்காவது தமிழாராய்ச்சி மாநாடு சிறப்புற நடைபெற்றதினால் ஆத்திரமடைந்த பேரினவாத சக்திகள் ஆயுதப் படையைக் கொண்டு அவ்விழாவின் இறுதி நாள் நிகழ்ச்சியில் வைத்தே பத்துப் பேரைப் படுகொலை செய்தது.

அதாவது. தமிழர் பற்றிய வரலாறும், அவர்களின் கலை, பண்பாட்டுப் பாரம்பரியம் என்பனவும் பேணப்படுவதற்கோ அன்றி வெளிக்கொண்டு வருவதற்கோ சிறிலங்கா பேரினவாத சக்திகள் எதிராகவே செயற்பட்டன. இலங்கையின் வரலாற்றை பௌத்த - சிங்களவர்களின் வரலாறு என்று நிரூபிக்க முற்படும் இப்பேரினவாத சக்திகள் அவற்றை முறியடிக்கக் கூடியதும், இலங்கையில் தமிழருக்கு தாயகம உண்டு, அவர்களுக்கென தனியான கலை, பண்பாட்டு பாரம்பரியங்கள் உண்டு என்பதையும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வலியுறுத்துவதற்கு பெரும் தடங்கலாகவே உள்ளன.

இதற்காக வரலாற்று ஆதாரங்களைத் திரித்துக் கூறுவதிலும், அழித்து விடுவதிலும் கூட சிறிலங்காப் பேரினவாத சக்திகள் மிகவும் அக்கறையாகவுள்ளன. இதன் வெளிப்பாடே கலிபோனியா மாநாட்டில் வல்லிபுரம் பொற்தகடு சம்பந்தமாக வைக்கப்பட்ட அறிஞர்களின் கருத்தை சிறிலங்கா பேரினவாத சக்திகள் மறுத்துள்ளமையும் அப்பொற்தகடு சிங்களவருக்கே உரியது எனக் கூறியுள்ளமையுமாகும். அதாவது இலங்கையின் வரலாறு கேள்விக்கும் ஆய்விற்கும் இடமின்றிச் சிங்கள பௌத்தர்களின் வரலாறு என்பதே பேரினவாத சக்திகளின் கருத்தாகும்.

இதன் ஒரு பகுதியாகவே 1982இல் யாழ். நூலகம் சிறிலங்கா பேரினவாத சக்திகளின் தூண்டுதலால் தீக்கிரையாக்கப்பட்டது. இத்தீவைப்பின் மூலம் தமிழரின் பெரும் கலைப் பொக்கிஷம் ஒன்றும், வரலாற்றுப் பண்பாட்டு ஆதாரங்களும் அழித்தொழிக்கப்பட்டன அதேபோன்றே இன்று இன அழிப்புடன் கூடவே தமிழரின் கலை, பணபாட்டுச் சின்னங்களையும், ஆதாரங்களையும் சிறிலங்கா அழித்து வருவதோடு, அவற்றை வெளிக்கொண்டு வரும் முயற்சிகளுக்கு எதிராகவும் செயல்படுகின்றது,

இந்நிலையில், தமிழர்கள் தமது கலை, பண்பாட்டு வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்க வேண்டும். அவை எமது தேசியத்தின் சொத்து,அவை எமது தேசியத்திற்கு வலுவூட்ட வல்லன. ஒரு தேசிய இனத்தின் தொன்மையும், பாரம்பரியமும், வரலாற்றுச் செழிப்பும் அதன்எழுச்சிக்கும் விடுதலைக்கும் அவசியமானவையாகும்.

# திருமலை நகர் பகுதியில் மீண்டும் வீதித்தடை

(மாங்குளம்)

திருக்கோணமலை நகரில் மீண்டும் வீதித்தடைகள் ஏற்படுத்தப்பட்டு சோதனை நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. மரத்தடிச் சந்தி, சிவன் கோயிலடி, அரசடிச் சந்தி ஆகிய பகுதிகளில் நிரந்தர வீதித்தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

துவிச்சக்கர வண்டிகளில் செல்வோர் இவ் வீதித்தடைகளைக் கடக்கும்போதுஇறங்கி நடந்து செல்ல வேண்டும் எனவும் பணிக்கப்பட்டுள்ளனர்.

இதே வேளை நகரப் பகுதிகளில் பொலிசார் அடிக்கடி திடீர் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதன் போது சந்தேகத்திற்கிடமானோர் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்படுகின்றனர். (82)

# 6 விமானிகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

ஏயர் லங்கா, ஆறு விமானிகளைக் கடமையிலிருந்து நிறுத்தி வைத்துள்ளது. இதற்கான காரணத்தை வெளியிட ஏயர் லங்கா நிறுவன அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

### "வரலாறும் சமூகக்கல்வியும்"

# திருத்திய பாடத்திட்டத்திற்கு தனியான வினாத்தாள்

(மாங்குளம்)

இவ்வருடம் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. (சா.த) பரீட்சையில் ''வரலாறும் சமூகக் கல்வியும்'' திருத்திய பாடத்திற்கு தனியான வினாத்தாள் தயாரிக்கப்படுவதாக பரீட்சை ஆணையாளர் பாடசாலைகளுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திருத்திய பாடத்திற்கான வினாத்தாள் நான்கு மணித்தியாலங்களைக் கொண்டிருக்கும் இரு வினாத்தாள்கள் வழங்கப்படும். முதலாவது வினாத்தாள் பல்தேர்வு வினாக்களையும் இரண்டாம் வினாத்தாள் கட்டமைப்பு, உப கட்டமைப்பு தன்மையான வினாக்களைக் கொண்டிருக்கும்.

கடந்த வருடம் பரீட்சைக்குத் தோற்றியோருக்கு முன்னைய பாடத் திட்டத்திற்கமைய அடுத்து வரும் இரு வருடங்களுக்கு சமூகக்கல்வி வினாத்தாள் வழங்கப்படும். (82)

# சோவியத்-இந்திய ஒப்பந்தம் 20 வருடம் நீடிப்பு

(டில்லி)

இந்திய-சோவியத் நட்புறவு ஒப்பந்தம் மேலும் இருபது ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவில் இருந்து இந்த ஒப்பந்தம் மேலும் இருபது ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டிருப்பதாக இந்திய வெளியுறவு அமைச்சு அறிவித்துள்ளது.

மேலும் இருபது ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டிருக்கும் இந்த ஒப்பந்தம் இருநாட்டு மக்களின் அடிப்படை நலன்களையும் கொண்டதாக இருக்கின்றது என்றும், அதனாலேயே நீடிக்கப்பட்டதாகவும் அறிவித்துள்ளது.

1971ஆம் ஆண்டு ஒகஸ்டு மாதம் 9ஆம் திகதி அன்று கையொப்பமான இந்த ஒப்பந்தம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் நீடிப்பதாக இருந்தது. ஆனால் இப்போது இருபது ஆண்டுகள் நீடிப்பதற்கான முடிவு இருநாடுகளும் வேண்டுமென்றே, உணர்ந்து எடுத்த ஒரு முடிவு ஆகும் என இந்திய வெளியுறவு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

1971ஆம் ஆண்டு இந்திரா காந்தியின் ஆட்சிக் காலத்தில் இந்த ஒப்பந்தம் இந்திய பாதுகாப்பு நலனை அடிப்படையாகக் கொண்டு கைச்சாத்திடப்பட்டது.

கைச்சாத்திடும் போதுஇந்த ஒப்பந்தம் இருபது ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

பின்னர் மொராஜி தேசாய் காலத்தில் கிழித்தெறியப்படுவதாக இருந்த ஒப்பந்தம் மீண்டும் ஏற்பட்ட இந்திரா காந்தியின் ஆட்சியினால் தொடர்ந்து இருந்து வந்தது.

# திருச்சியில் 6 இலங்கையர் பொலிஸாரால் கைது

(சென்னை)

விடுதலைப் புலிகளைச் சேர்ந்த ஒரு பெண்மணி உட்பட ஆறு இலங்கைத் தமிழர்களை திருச்சி நகரில் கைது செய்ததாக தமிழக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்கள் என்றும், தமிழக அரசின் உத்தரவுப் படி அவர்கள் தமது பெயர்களை காவல் நிலையத்தில் பதிவு செய்து கொள்ளாமல் இருந்தார்கள் என்றும் தமிழக பொலிசார் தெரிவித்தனர்.

இதனிடையே ஏற்கனவே கைது செய்யப்பட்ட ஹோமியோபதி டாக்டர் தமிழகத்திலிருந்து இலங்கைக்கு ஆயுதங்களையும், வெடிப்பொருள்களையும் அனுப்புவதற்கு உதவி வந்தார் எனவும் தமிழகபொலிசார் தெரிவித்தனர்.

# காங்கேயம் தொகுதியில் தி.மு.க. போட்டியிடாது

(சென்னை)

காங்கேயம் சட்டப் பேரவைக்கான இடைத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிடாது என அக்கட்சி அறிவித்துள்ளது.

இக்கட்சியின் பொதுச்செயலாளர் க. அன்பழகன் விடுத்துள்ள அறிக்கையொன்றில், மத்திய தேர்தல் அதிகாரியை தி.மு.க. மற்றும் அதன் தோழமைக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து முறையிட்டும் இந்த தொகுதி வேட்பாளருக்கு கட்சிச் சின்னம் வழங்கப்படாததால் இந்த முடிவு ஏற்பட்டதாக குறிப்பிட்டிருந்தார்.

முன்னதாக காங்கேயம் தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளருக்கு கட்சிச் சின்னம் வழங்காது சுயேச்சை வேட்பாளருக்கு உரிய சின்னமே வழங்கப்பட்டது.

# தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

தொலைக்கல்வி ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி ஒன்று எதிர்வரும் 12 ஆம் திகதி காலை 8-00 மணிக்கு வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகா வித்தியாலயத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இதில் கலந்து கொள்ளும் சகல பயிற்சி ஆசிரிய மாணவர்களையும் (பயிலுனர் ஆசிரியர்) தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இப்பயிற்சி நெறியானது தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு நடைபெறவுள்ளதால் பங்குபற்றுவோர் ஆக்கம், அழகியல். விளையாட்டு ஆகிய பயிற்சிகளுக்கான உடைகள், உபகரணங்களுடன் சமுகமளிக்குமாறு போதானாசிரியர்கள் கேட்டுள்ளனர்.

### மாணவர் தொகையை

# ஈரானில் கட்டுப்படுத்த குடும்பக் கட்டுப்பாட்டு திட்டம்

(தெகிரான்)

ஈரானில் பாடசாலைக்குச் செல்லும் வயதுடைய பிள்ளைகளின் தொகையை கட்டுப்படுத்த குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் அமுல் செய்யப்பட வேண்டும் என்று ஈரானிய கல்வி அமைச்சர் கேட்டுள்ளார்.

பத்து ஆண்டுகளில் பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளின் எண்ணிக்கை இருமடங்காக அதிகரிக்கும் என்றும், இதனால் பிள்ளைகள் தற்போது பெற்றுவரும் கல்வியின் தரம் பாதிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த வருடம் ஈரானின் சனத்தொகை 5 கோடி 85 லட்சம் ஆகும். இவர்களில் 1 கோடி 40 லட்சம் பேர் பாடசாலை மாணவர்கள் ஆவார். இந்த அதிகரிப்பை கட்டுப்படுத்தவே நடவடிக்கை எடுக்க வேண்டும் என கல்வி அமைச்சர் கேட்டுள்ளார்.

# சைக்கிள் திருட்டு

(கொழும்புத்துறை)

ஈஸ்டேன் சைக்கிள் ஒன்று கடந்த 5ஆம் திகதி (5-8-91) திங்கட்கிழமை பகல் 12-30 மணிக்கும் 1-00மணிக்குமிடையில் களவாடப்பட்டுள்ளது.

இத்திருட்டுச் சம்பவம் யாழ் நல்லூர்,பருத்தித்துறை வீதி, இல. 241, ''பெத்தல்'' இல்லத்தில் நடைபெற்றது. இத்திருட்டு விடயம் பற்றி உரிமையாளராகிய யாழ். பல்கலைக்கழக மாணவனாகிய கே. சிவகுமார் நல்லூர் பிரதேச தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணி காரியாலயத்தில் முறைப்பாடு ஒன்றினைச் சமர்ப்பித்துள்ளார். (24)

# பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பகுதியில் இருந்து உணவு முத்திரைத் தொகுதி ஒன்று கந்தசாமி என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

## பயன்தரும் யுத்தநிறுத்தம் கடைப்பிடிக்கக் கோரிக்கை

(பெல்கிரட்)

பிரச்சினையில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் முழுமையான மதிப்பளித்து ஏற்றுக்கொள்ளக்கூடிய நிரந்தரமான பயன் விளைக்கக்கூடிய யுத்த நிறுத்தத்தை நடைமுறைப்படுத்தும்படி 35 நாடுகள் கலந்து கொண்ட ஐரோப்பிய பாதுகாப்பு மாநாட்டில் நேற்று முன்தினம் இரண்டாவது தடவையாகவும் கோரப்பட்டது.

இதனைத் தொடர்ந்து யூகோஸ்லாவியாவில் போர் நிறுத்தத்தை உறுதிப்படுத்தவும் அதனைக் கண்காணிப்பதற்கு உதவக்கூடியதுமான சர்வதேச அவதானிகள் குழுவொன்றை அனுமதிக்க யூகோஸ்லாவிய அரசாங்கம் இணங்கியுள்ளது,

யூகோஸ்லாவியாவில் நடைபெறும் சண்டைகளினால் அப்பாவி மக்கள் கொல்லப்படுவதையிட்டும் ஐரோப்பிய பாதுகாப்பு மாநாடு கவலை தெரிவித்துள்ளது. இம்மாநாட்டில் யூகோஸ்லாவியா தவிர்ந்த ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளும் அங்கம் வகித்துள்ளன.

## பாரதீய ஜனதாக் கட்சி நேற்று வெளிநடப்பு

(டில்லி

"மத்திய அமைச்சர் மாதவ் ராவ் சிந்தியா பாரதீய ஜனதாக் கட்சிக்கு எதிராக கூறிய பேச்சுக்களினால் தோன்றியுள்ள சிக்கல் நேற்று லோக்சபா கூடிய போதும் அக் கூட்டத்தை பாதித்தது என இந்திய வானொலி தெரிவித்தது.

நேற்று லோக்சபா கூடிய போது பாரதீய ஜனதாக் கட்சியும் அதன் தோழமைக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தனர்

வெளிநடப்புச் செய்வதற்கு முன்னர் பேசிய பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் எல் கே. அத்வானி 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தின் 49 வது ஆண்டு நிறைவு நிகழ்ச்சியின் கண்ணியத்தை குறைக்கும் வகையில் சபை நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடவிரும்பவில்லை என்பதாலேயே வெளி நடப்புச் செய்வதாக தெரிவித்தார்.

கடந்த மூன்று நாட்களாக இடம் பெற்ற லோக் சபாக் கூட்டங்கள் கூச்சல் குழப்பங்கள் நிறைந்ததாக காணப்பட்டமை தெரிந்ததே.

## தேர்தல் ஆணையாளரின் முடிவு சரியானது

(டில்லி)

பஞ்சாப்பில் தேர்தலை ஒத்தி வைப்பதென தலைமைத் தேர்தல் ஆணையாளர் ரி. என். சேஷன் மேற்கொண்ட முடிவு சரியானது என்று உச்ச நீதிமன்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

குறிப்பிட்ட ஒரு பகுதியில் நிலவும் சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்து தேர்தலுக்கான திகதியை மாற்றவோ அல்லது ஒத்திவைக்கவோ தலைமைத் தேர்தல் ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு என்று உச்சநீதிமன்றம் அதன் தீர்ப்பில் கூறியுள்ளது.

தேர்தல் பிற்போடப்பட்டதை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட மனுவை உச்ச நீதிமன்று தள்ளுபடிசெய்தது.

## கடத்தப்பட்ட சிலை மீள ஒப்படைப்பு

(சென்னை)

தஞ்சை மாவட்டம் பத்தூர் விஸ்வநாத ஆலயத்துக்குச் சொந்தமான நடராசர் சிலை நேற்றுச் சென்னையில் முதலமைச்சர் ஜெயலலிதாவிடம் ஒப்படைக்கப்பட்டது. சென்னையில் நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சி ஒன்றில் பிரித்தானியாவுக்கான இந்திய உயர்ஸ்தானிகர் இந்தச் சிலையை முதலமைச்சரிடம் ஒப்படைத்தார்.

தமிழ் நாட்டிலிருந்து கடத்திச் செல்லப்பட்டு பத்தாண்டு காலம் நீதிமன்றங்களில் வழக்கு நடந்த பிறகு இந்தச் சிலை லண்டனிலிருந்து மீளக் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த வெண்கலச் சிலை 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. 1976 ஆம் ஆண்டில் இந்தச் சிலை கடத்திச் செல்லப்பட்டது.

## இந்திய தொலை உணர்வு செயற்கைக்கோள்

இந்தியத் தொலை உணர்வு செயற்கைக்கோள் ஐ ஆர். எஸ் ஒன்று 'பி' இந்தமாதம் 26 ஆம் திகதியன்று பூமியின் சுற்றுப் பாதையில் செலுத்தி வைக்கப்படும். இது சோவியத் றொக்கட் ஒன்றினால் செலுத்திவைக்கப்படவுள்ளது.

இது பூமி மற்றும் கடல்வள ஆய்வுச் செயற்கைக் கோள் ஆகும்.

**ஆலயத்தின்**

க்காத நிலையில் காணப்பட்டது.

27 வயது மதிக்கத்தக்க இளைஞரின் சடலம் சாம்பல் நிற நீளக்காற்சட்டை சேட்டுடன் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (88) (21)

**தனியார்**

அமைய நடாத்தப்படல் வேண்டும் எனவும் இந்த விதிகளை மீறி செயல்படும் நிறுவனங்கள் மீது மிகக்கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் யாழ். மாவட்டத் தனியார் கல்வி நிறுவன ஒன்றியச் செயலாளர் அறிவித்துள்ளார். (ச)

## யூனிவேர்சலில் மீண்டும் வகுப்புகள்

கந்தர்மடம் யூனிவேர்சல் கல்வி நிறுவனத்தில் போர்க்கால சூழலில் மாணவர்கள் இணைதலின் பொருட்டு இது வரை இடை நிறுத்தப்பட்டிருந்த வகுப்புகள் யாவும் மீள ஆரம்பமாகவுள்ளன. ஞாயிற்றுக்கிழமை க. பொ. த உயர்தர வகுப்புகளும் திங்கட் கிழமை ஏனைய வகுப்புகளும் வழமையான நேரசூசிகையின் படி நடைபெறும் B/2930

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

**கலந்துரையாடல்**

இடம் பெயர்ந்த குடும்பங்களது உலர் உணவு விநியோகம் தொடர்பான உதவி அரசாங்க அதிபர்களது கலந்துரையாடல் வரும் திங்கட்கிழமை 12ஆம் திகதி நடைபெறவுள்ளது.

காலை 10-00 மணிக்கு யாழ். செயலக கேட்போர் அரங்கில் நடைபெறும் இந்த கலந்துரையாடலுக்கு உதவி அரசாங்க அதிபர்களை தவறாது கலந்து கொள்ளும் படி மேலதிக அரசாங்க அதிபர் சண்முகநாதன் கேட்டுள்ளார்.

## கோயிலில் திருட்டு

யாழ். திருநெல்வேலிகிழக்கு பூதவராயர் கோயிலின் பின் பக்கக் கதவு திருடர் கோஷ்டியினரால் கடந்த 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு உடைக்கப்பட்டு பல பெறுமதி மிக்க பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

இத்திருட்டின்போது ஆலய உண்டியல் உடைக்கப்பட்டு சுவாமியின் அங்கிகள், வேட்டி சேலைகளும், கத்தி, வாள் போன்ற பழைய கால ஆலய ஆயுதங்களும் திருடர்களால் திருடப்பட்ட பொருள்கள் ஆகும். (24)

**6 இராணுவம்**

மீது தாம் தொடர்ந்து தாக்குதல் நடத்துவதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் நேற்றைய, முன்தின மோதல்களில் மட்டும் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டும், 52 இராணுவத்தினர் படுகாயம் அடைந்தும் உள்ளதாகச் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன,

**போரினால்**

இலங்கைப் பிரஜைகள் சுமார் எழுபத்து நான்காயிரம் பேருக்கும் எவ்வித விசாரணையுமின்றி சுமார் ஒருலட்சம் ரூபா வழங்கப்படுமென தொழில் அமைச்சர் ஜி. எம். பிரேமச்சந்திரா தமது அமைச்சில் நேற்றுக்காலை நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

**ஊக்குவிப்பு**

காத ஆசிரியர்களுக்குக் கால தாமதமாகிப் பின்னர் சேவை நீடிப்பு வழங்கப்பட்டதால் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படாது இருந்தது. இதை வழங்குமாறு இப்போது இவர்கள் கோரிய போதும், உரிய நிதி இல்லை எனக் கைவிரிக்கப்படுகிறதாம். இவர்களது கொடுப்பனவை வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

**அனுமதி**

யின் அவர்கள் உள்ளே வரும் போது வழங்கப்பட்ட அனுமதி அட்டையைக் காட்டி அவசர அனுமதிப்பத்திரம் வழங்கும் காரியாலயத்தில் பணத்தைச் செலுத்தி அனுமதிப் பத்திரத்தை பூர்த்தி செய்த பின் உடனடியாகப் புதுப்பிக்கலாம்.

20,06-91க்கு முன் வடபகுதிக்குள்ளே வந்தவர்கள் வட பகுதியைவிட்டு வெளியே செல்வதாயின் சாதாரண நடைமுறைகளைப் பயன்படுத்தி விண்ணப்பிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் மண்மீட்பு நிதியைச் செலுத்தியோர் மாத்திரம் செலுத்தியதை உறுதிப்படுத்த பற்றுச்சீட்டின் பிரதியை அல்லது சிற்றூரவையின் சிபாரிசுக் கடிதத்தை இணைக்க வேண்டும். மாவீரர் குடும்பம், போராளிகள் குடும்பம் தவிர்ந்த ஏனையோர் மண்மீட்பு நிதி செலுத்தாவிடின் அதற்குரிய காரணத்தை மண்மீட்பு நிதி தொடர்பகத்தில் மாத்திரமே உறுதி செய்தபின் விண்ணப்பிக்க வேண்டும். இத்தகவல்களை தமிழீழ போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு வெளியிட்டுள்ளது.

ராமகிருஷ்ண ஹெக்டேயின்

## உறுப்புரிமை நீக்கம் பாரபட்சமானது

- மதுதண்டவதே

(டில்லி)

கர்நாடக சட்டப் பேரவை உறுப்பினர் பதவியிலிருந்து ராமகிருஷ்ண ஹெக்டே உறுப்புரிமை நீக்கம் செய்யப்பட்டதை ஜனதாதளக் கட்சியின் மூத்த தலைவர்களான பேராசிரியர் மதுதண்டவதேயும், சுரேந்திர கோபனும் குறை கூறியிருக்கிறார்கள்.

இது தொடர்பாக மாநில ஆளுநர் வெளியிட்ட பணிப்புரை தன்னிச்சையானதும், பாரபட்சமானதும் என்று அவர்கள் புதுடில்லியில் வெளியிட்டிருக்கும் தனித்தனியான அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

## இந்த வருட இறுதிக்குள் பாகிஸ்தானில் ராணுவ ஆட்சி

- நவாப் அக்பர் கான்

(நியூயோர்க்)

பாகிஸ்தானில் இந்த ஆண்டு இறுதிக்குள் இராணுவ ஆட்சி மீண்டும் வரக் கூடும் என பலுக்கிஸ்தான் முன்னாள் முதலமைச்சர் நவாப் அக்பர் கான் தெரிவித்துள்ளார்.

நியூயோக்கில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அக்பர்கான் இந்த ஆண்டு பிற்பகுதியில் அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படும் இராணுவ ஆட்சி கடுமையானதாகவும், பாதிக்கக் கூடியதுமாக இருக்கும் எனத் தெரிவித்தார்.

நவாப் ஷெரீப் அரசாங்கம் தனது கடமைப் பொறுப்புக்களை செய்யத்தவறிவிட்டது என்றும், ஆகவே அது அகற்றப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

## பிரான்ஸ் நிவாரணப்பணி நிர்வாகி கடத்தல்

(பாரிஸ்)

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த நிவாரணப்பணி அமைப்பான அனைத்துலக நிவாரணப் பணி முகாமைக் கழகத்தின் நிர்வாகி ஜெரோம் லேரோன் நேற்று முன்தினம் கைதிகள் உரிமைப் பாதுகாப்பு இயக்கத்தினரால் லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் வைத்து கடத்திச் செல்லப்பட்டுள்ளார். இதனை நேற்றுஉறுதிசெய்த பிரான்ஸ் வெளியுறவு அமைச்சரகம் அவரை விடுவிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாகக் கூறியது.

## பார்வையாளர்களால் தொல்லை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலை வெளிநோயாளர் பிரிவில் அதிகாலையில் வரும் பெருந்தொகையான பார்வையாளர்களால் நோயாளிகளுக்கு பெரும் அவஸ்தை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அவசர சிகிச்சைக்கு வரும் நோயாளிகள் வைத்திய சாலையில் இறக்கப்படும்போது இவர்கள் இடைஞ்சலை உண்டாக்குவதாகவும் மேலும் வெளிநோயாளர்பிரிவில் உள்ள பார்வையாளர் இருக்கைகளில் இருக்கும் ஒரு சிலர் சுகாதார கேடான காரியங்களில் ஈடுபடுவது தற்போது அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தனியார் நிறுவனத்திடம் மின்சக்தி உற்பத்தி

(கொழும்பு)

சிறிலங்கா அரசு மின்சக்தி உற்பத்தியை தனியார் நிறுவனங்களுக்கு கையளிக்க ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா நிறுவனம் ஒன்று அந்நிய நிறுவனம் ஒன்றின் உதவியுடன் கூட்டாக இந்த முயற்சியை மேற்கொள்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

**மலையக**

ஏனையவர்களும் கைது செய்யப்படுவது ஐ தே. கட்சியின் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை என தெரிவிக்கப்படுகின்றது கடந்த வருடம் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்திற்கு எதிரான அன்னையர் முன்னணியினரின் போராட்டத்திற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து மலையக மக்கள் முன்னணியும் ஆதரவு தெரிவித்திருந்தது. இதற்கு பழிவாங்கும் நோக்குடனேயே ஐ. தே. கட்சி அரசாங்கம் தற்பொழுது செயற்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது. இதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் ஆதரவும் இருப்பதாகவும் தெரியவருகின்றது.

அண்மையில் நுவரெலிய-அம்பேகமுவ பிரதேச சபையின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய சுகாதார மகளிர் விவகார அமைச்சர் ரேணுகா ஹேரத் இ. தொ. காவினதும் தலைவர் தொண்டமானினதும் அரசியல் செல்வாக்கை மழுங்கடிப்பதற்காக, திரு. சந்திரசேகரனுக்கு பண உதவி செய்து மலையக மக்கள் முன்னணியை வளர்க்க சிறிலங்கா சுதந்திர கட்சி முற்பட்டது எனத் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை பெரிய புலம் மகாவித்தியாலயத்தில் மகளிர் அபிவிருத்தி நிலையம் இன்று (10-08-91) யாழ். மாவட்டத்தில் சிறுவர் பயிற்சி நெறியை பின்பற்றும் சுமார் 125 இளம் யுவதிகளுக்கான கருத்தரங்கொன்றை நடாத்தவுள்ளது.

**பாராளுமன்ற**

வாக்கெடுப்புக்கு விடப்படாமலேயே நிறைவேற்றப்பட்டது.

இப் பிரேரணை தொடர்பான விவாதத்தின் போது பேசிய நவசமசமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார வடக்கு கிழக்குப் பகுதியில் அரசாங்கம் யுத்த நிறுத்தம் ஒன்றைப் பிரகடனம் செய்ய வேண்டுமென்று கோரினார், இக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட போதும் பன்னிரண்டு அங்கத்தவர்களைக் கொண்ட பாராளுமன்ற தெரிவுக்குழு அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.